SS PRITHVI - PRIT-EDUCATION- CLICK FOR MORE
www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 12

தேர்வு எண் 1 2 2 1 2

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – 1

குறிப்பு: அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. பொருத்துக.

அ) குரங்குகள் – 1. கன்றுகளைத் தவிர்த்தன

ஆ) விலங்குகள் – 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன

இ) பறவைகள் – 3. குளிரால் நடுங்கின

ஈ) பசுக்கள் – 4. மேய்ச்சலை மறந்தன

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

3. "உவா உற வந்து கூடும்

உடுபதி, இரவி ஒத்தார்" யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

4. "குழிமாற்று" எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

5. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ் கழல் மன்னற்குக் காட்டல்....... தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.

2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

6. "பலர் துஞ்சவும் தான் துஞ்சான்" – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்.

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருந்திரங்கண்ணனார்

7. நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது.

அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை

இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

SS PRITHVI - PRIT-EDUCATION- CLICK FOR MORE


8. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

9. "விளியறி ஞமலி" – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாளி

10. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

11. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்.

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

12. பினவருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான்போ ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ) இந்தாபோறான் தருமன்

13. ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகம் ------

அ) அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆ) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

இ) கன்னிமாரா நூலகம் ஈ) உ.வே.சா நூலகம்

14. வல்வில் ஓரி ஆண்ட கொல்லிமலை அமைந்துள்ள மாவட்டம் ---------

அ) தருமபுரி ஆ) நாமக்கல் இ) சிவகங்கை ஈ) திருநெல்வேலி

## பகுதி – II

### பிரிவு–1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. ஞாலத்தின் பெரியது எது?

16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

17. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

21. எழுத்தாணிகளின் வகைகளை எழுதுக.

### பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

23. கலைச்சொல் தருக.

அ) INTERNET BANKING ஆ) TAKE OFF

24. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்து இருவேறு தொடர்களை அமைக்க.

முன்<

25. ஏதேனும் ஒன்றனுக்குப் இலக்கணக்குறிப்பு தருக.

அ) தாழ்கடல் ஆ) அறியா

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) அறுத்து ஆ) தந்தனன்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

SS PRITHVI - PRIT-EDUCATION- CLICK FOR MORE
www.Padasalai.Net www.TrbTnpsc.com

27.ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) பெருங்கடல் ஆ) தலைக்கோல்

28.கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

திரை, காண், கைதட்டல், மக்கள்

29.சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

தலைமை

30.பொருள் வேறுபாடு அறிந்து தொடரமைக்க.

புல் – புள் (அல்லது) கான் – காண்

பகுதி – III

பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

32.வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

33.யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

34.கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35.பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.

36.நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37.சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

38.வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

அ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்

(அல்லது)

ஆ) எறும்பு ஊரக்கல்லும் தேயும்

40.கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

1. நேற்று முதல் -------- (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
2. உங்களுக்கு ------- (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
3. முருகன் -------- (வேகம்) சென்றும்பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
4. நம்முடைய --------- (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

41. வாகைத் திணையை விளக்குக.

(அல்லது)

பரிசில் துறையை விளக்குக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

SS PRITHVI - PRIT-EDUCATION- CLICK FOR MORE


42. கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |

பத்துப்பாட்டு

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

43. துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர். – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

நிரல் நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன – நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ...... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

(அல்லது)

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

47. அ) "குகனோடும்......" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) '...... அரண்' – என முடியும் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள குறட்பாவை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com